**தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு - 2014**

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தினை அபிவிருத்தி செய்தல் அதிகாரச்சட்டத்தின் vii ஆவது பகுதியின் 40 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்படவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு

கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலாதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் புலனாய்வுகளைச் செய்வதற்குரிய விஞ்ஞானிகளுக்கு செலுத்த வேண்டிய ரூபா 695,000 தொகை தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தினை அபிவிருத்தி செய்தல் அதிகாரச்சட்டத்தின் 5(ஆ) பிரிவு | ‘‘அரசாங்க மற்றும் தனியார் பிரிவுகளின் முயற்சிகளினால் விஞ்ஞான, தொழில்நுட்ப பயன்பாடுகள் தொடர்பாக முன்னைய ஆண்டில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப செயற்பாடுகளின் மீளாய்வு அறிக்கை’’ முன்னைய ஆண்டிற்காகவும் மீளாய்வாண்டிற்காகவும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2011 செப்தெம்பர் 15 ஆந் திகதிய 58(2) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு | பணிப்பாளர் சபைக் கூட்டங்களுக்கான படிகளைச் செலுத்தும் போது 10 சதவீத நிறுத்தி வைத்தல் வரி கழிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் நிறுத்தி வைத்தல் வரி கழிக்கப்படாமல் ரூபா 272,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) | 2006 மார்ச் 01 ஆந் திகதிய 09 ஆம் இலக்க தேசிய கொள்வனவு நிறுவன சுற்றறிக்கையின் 2.7.7 ஆம் அத்தியாயம் | வலயக் கொள்வனவுக் குழு அங்கத்தவர்களின் எண்ணிக்கை மூன்று பேராக இருக்க வேண்டியதுடன் அதில் ஒருவர் கொள்வனவு நடைமுறைகள் தொடர்பான அறிவுள்ள கொள்வனவுப் பிரிவிற்கு வெளியே உள்ள நபராக இருக்க வேண்டிய போதிலும் ஆணைக்குழுவின் கொள்வனவுக் குழுவிற்காக நிறுவனத்தின் மூன்று உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். |

## 2.4 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி முகாமைத்துவ சபை தீர்மானத்தின் அடிப்படையில் ஆணைக்குழுவிற்காக மதியுரையாளர் ஒருவரின் சேவை பெறப்பட்டிருந்ததுடன் 04 மாத காலத்திற்காக அதற்காக ரூபா 240,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக ஆணைக்குழுவின் செயற்பட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 153,004 மிகையைக் காண்பித்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 130,785 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 283,789 தொகையான அதிகரிப்பொன்றைக் காண்பித்த போதிலும் 2.2.1 ஆம் பந்தியில்

காண்பிக்கப்பட்ட விடயங்கள் சீராக்கப்பட்டிருக்குமாயின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 541,996 பற்றாக்குறை ஏற்பட்டிருக்கும்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்ாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி 04 அரசாங்க நிறுவனங்களின் நடவடிக்கைகள் புலனாய்வு செய்யப்பட்டு உரிய அறிக்கையை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 1,656,995 தொகை செலவிடப்பட்டு புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இருந்த போதிலும் அதன் படி இறுதி அறிக்கை அனுப்புவதற்கு ஆணைக்குழு தவறியிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் வரைவு அறிக்கை மாத்திரம் அனுப்பப்பட்டிருந்தது.

(ஆ) ஆணைக்குழுவால் இலங்கையில் மேற்கொள்ளப்படுகின்ற சகல விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களையும் புலனாய்விற்கு உட்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 1.4 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அதற்குரித்தாக எந்தவொரு நடவடிக்கையும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கொள்கை தொடர்பாக தற்போதைய முக்கியத்துவத்தை ஆய்வு செய்வதற்காக ரூபா 1.6 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் ஆணைக்குழு நடாத்திய ஏழாவது இருதரப்பு மாநாட்டு வேலை நடவடிக்கைகளுடன் ஆய்வு நடவடிக்கைகளையும் நிறைவேற்றுவதற்காக ரூபா 34,541 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அதன் படி செலவிடப்பட்ட கிரயம் 2.2 சதவீதமானதால் ஆணைக்குழு மிகை மதிப்பீடொன்று தயாரித்திருந்தமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) ஆணைக்குழுவால் ரூபா 2,995,861 செலவில் ஒழுங்கமைக்கப்பட்ட ஏழாவது இருதரப்பு மாநாட்டின் போது 10 துறைகளுக்குரிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு இணங்கியிருந்த

போதிலும் ஒரு துறைக்குரிய நிகழ்ச்சித்திட்டம் மாத்திரமே செயற்பாட்டு நிலைமையில் காணப்பட்டது.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

தேசிய விஞ்ஞானகூட உபகரண நிலையத்திற்கான கொள்கை தொடர்பான வரைவு அறிக்கை 2014 யூன் 30 ஆந் திகதி ஆணைக்குழுவிற்கு கிடைத்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 வெளிப்படையான மோசடிகள்**

2014 மே 02 ஆந் திகதி சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தரொருவருக்கு உரித்தான விடுமுறையினை விஞ்சி வழங்கப்பட்ட 8½ நாட்கள் தனிப்பட்ட விடுமுறைகளுக்காக சம்பளமற்ற விடுமுறையாக சம்பபளத்திலிருந்து கழிக்கப்படாதிருந்ததுடன் தாபன விதிக் கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவின் படி வெளிநாட்டுப் பிரயாணத்திற்காக கௌரவ பிரதமரின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

**4.4 பதவியணியினர் நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 19 ஆக இருந்ததுடன் அதில் சிரேஷ்ட 02 விஞ்ஞானிகள் பதவிகளும், தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப உதவியாளர் பதவியொன்றும் முகாமைத்துவ உதவியாளர் பதவியொன்றும் வெற்றிடங்களாகக் காணப்பட்டன.

(ஆ) ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்பு நடைமுறைக்குப் புறம்பாக மீளாய்வாண்டின் போது சிரேஷ்ட விஞ்ஞானி பதவிக்காக உத்தியோகத்தரொருவர் சேர்க்கப்பட்டு ரூபா 480,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவில் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று கணக்காய்வுத் திகதி வரையிலும் ஸ்தாபிக்கப்படாதிருந்ததுடன் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் சுற்றுநிருபத்தின் 09 ஆவது பிரிவின் படி மீளாய்வாண்டிற்காக காலாண்டு ரீதியான உள்ளகக் கணக்காய்வு அறிக்கை, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்களில் கலந்துரையாடலுக்காக சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் ஆண்டின்போது கணக்காய்வு ஐயவினா எதுவும் அனுப்பப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீட்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும் உள்ளபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பிடும் போது 10 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான முரண்கள் ஏற்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றன.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஆ) பதவியணியினர் முகாமைத்துவம்